# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 சித்திரை 23 (6-05-1998) புதன்கிழமை UTHAYAN- Akivaly National Tamil Daily கதிர்:136


## 2 ஊர்காவலர் அம்பாறையில் பலி

வவுனியா, மே 6

அம்பாறை மாவட்டத்தில் நேற்று அதிகாலை 12-50 மணியளவில் ஊர்காவலர் படை முகாம் காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு ஊர்காவலர் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலில் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

அதேநேரம் — மட்டக்களப்பு ஒட்டமாவடி பாலத்தில் அமைந்திருந்த காவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனப்பிரச்சினை: ஐ. நா. தலையிட வேண்டும்!

### நேற்றைய கூட்டத்தில் ஒலரா ஒட்டுனுவிடம் வற்புறுத்து

யாழ்ப்பாணம், மே 6

''இலங்கையில் நிகழும் யுத்தத்தால் வயோதிபர்கள், சிறுவர்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதை தவிர்க்க இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ. நா. தலையிட வேண்டும்.''

யாழ்ப்பாணம் வந்திருந்த ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுனு விடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை நடந்த வைபவம் ஒன்றில் வைத்து கல்விமான்கள், மதப்பெரியார்கள், யாழ். பிரமுகர்கள் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தனர்.

இலங்கையில் சமாதானத்தை விரும்பிய தந்தை செல்வாவின் நூற்றாண்டை கொண்டாடிக் கொண்டிருக்கும் நாம் போராட்டத்தில் 40 ஆவது வருடத்தையும் கடந்து கொண்டிருக்கின்றோம்.

இலங்கையில் தொடரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படைக்கு ஆள் திரட்டும் முயற்சி பயனளிக்காவிடில் கட்டாய ராணுவ சேவை!

## அரசு ஆராய்கிறது

கொழும்பு, மே 6

படையில் இருந்து தப்பியோடிய படையினர் திரும்பி வர அளிக்கப்பட்டுள்ள பொது மன்னிப்பு பயன் அளிக்காத பட்சத்தில்—

புதிதாக படைகளுக்கு ஆள் சேர்க்கும் முயற்சியும் பயன் அளிக்காத பட்சத்தில்—

கட்டாய இராணுவ சேவையை அமுல்செய்வது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

படைகளில் பணியாற்ற அவசரமாக 15 ஆயிரம் பேர் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவெற்றிடத்தை நிரப்பும் முயற்சியாக படையில் இருந்து தப்பி ஓடியவர்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)



அப்ப இனித்தான் தெற்கில் தீர்வைப்பற்றி யோசிக்கப் போகினம்......!

## புலிகளைச் சந்தித்துப் பேச இன்று வன்னி செல்கிறார்

வவுனியா, மே 6


ஐ. நா. செயலாளரின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்துள்ள ஒலரா ஒட்டுனு விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடன் பேச்சு நடத்த இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்கு இன்று செல்கிறார்.

இவரின் வருகைக்காக இன்றும், நாளையும் மோதல் தவிர்ப்பு நிலையைக்கடைப்பிடிப்பதென விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இன்று காலை 11. 30-க்கு வவுனியா வரும் அவர் வவுனியா இராணுவத் தளத்தில் படை அதிகாரிகள், பொலீஸார் ஆகியோரைச் சந்திப்பார்.

அதன் பின்னர் 12:15-க்கு வவுனியா அரச அதிபர், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தில் அவர் சந்திப்பார்.

அதைத் தொடர்ந்து மடுவுக்கு சென்று அங்கிருந்து விடுதலைப் புலிகளால் வன்



ஒலரா ஒட்டுனு

னிக்கு அவர் அழைத்துச் செல்லப்படுவார்.

இன்றும், நாளையும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 15 ஆயிரம் பேரைச் சேர்ப்பது மூலம் யுத்தத்தில் வெற்றி பெற முடியுமா?

### அனுருத்த பதவி துறக்க ரணில் கோரிக்கை

கொழும்பு, மே 6

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையை இருமாதங்களில் முடிவுக்குக் கொண்டு வருவேன் என்று கூறிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இன்னும் முடிவுக்கு கொண்டு வரவில்லை அவர் உடன் பதவி விலகவேண்டும் 15 ஆயிரம் பேரை படையில் சேர்ப்பது மூலம் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட முடியுமா?

இப்படிக் கேட்டார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த சமயம் அதில் பேசுகையிலேயேஅவர் இப்படிக்கேட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

படைகளுக்கு 15 ஆயிரம் பேரைச் சேர்க்கப்போவதாகவும், கட்டாய இராணுவ சேவையை அமுல் செய்யப் போவதாகவும் அரசாங்கம் கூறுகிறது.

இவ்வாறு படைகளுக்கு ஆள்களைச் சேர்ப்பதால் பயனில்லை. அவர்களுக்கு பயிற்சி அளிக்க ஒருவருடம் தேவை, பயிற்சி அளிக்காது போர் முனைக்கு அவர்களை அனுப்பினால் அவர்களை இழக்க நேரிடும்.

ஒருவருடமாக நீடிக்கும் இராணுவ நடவடிக்கையில் வெற்றி பெற முடியாது.

உடனடியாக பேச்சுக்களை ஆரம்பித்து தீர்வுகாணப்பட வேண்டும் இப்படி அவர் கூறினார், (இ-3)

## அத்தாஸ் கொலை முயற்சி

## விமானப்படையை சேர்ந்த இருவர் நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, மே 6

''சண்டேரைம்ஸ்'' பத்திரிகையின் பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் இக்பால்அத்தாஸ் மீது விடுக்கப்பட்ட கொலைப்பயமுறுத்தல் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட இரகசியப்பொலீஸார் விமானப் படையைச் சேர்ந்த இருவரை நேற்று கங்கொடவில நீதிவான் முன் ஆஜர்செய்தனர்.

விமானப்படையைச் சேர்ந்த ருக்மன் ஹேரத்ரடி

(10ஆம் பக்கம் பார்க்க)

## விறகு வெட்டச் சென்ற படையினர் மீது தாக்குதல்!

### செட்டிகுளத்தில் இருவர் பலி

கொழும்பு, மே 6

செட்டிக்குளம் காட்டுப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற படையினர் மீது நேற்று நண்பகல் 1-30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் ஒரு பொலீஸாரும், விசேட அதிரடிப் படைவீரர் ஒருவரும் உயிரிழந்தனர்.

2 படையினர் காயம் அடைந்தனர். (இ-3)

## யாழ். வருவதற்கு

## ரெலோ பிரமுகருக்கு இன்னும் அனுமதி இல்லை

### கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 6

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் முக்கிய பிரமுகருமான என். ஸ்ரீ காந்தா யாழ்ப்பாணம் வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கப் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரெலோ ஸ்தாபகர் சிறிசபாரத்தினத்தின் நினைவு நாள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்று மோதல்

வவுனியா, மே 6

வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் நேற்று மோதல்கள் வெடித்ததாக வவுனியாவுக்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

காலைமுதல் ஷெல் முழக்கங்கள் கேட்டன. விமானங்கள் பறந்த வண்ணம் இருந்தன. அம்புலன்ஸ் வாகனங்கள்' ஓடித்திரிந்தன.

எங்கே மோதல் நடக்கிறது என்பதை வவுனியா படை வட்டாரங்கள் உறுதி செய்யாத போதும், மோதல் இடம் பெறுவதாக மட்டும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## அம்பிகாபதிநடேசானந்தன்

(நீதிமன்ற ஊழியர், யாழ்ப்பாணம்)

நாரந்தனையை பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது திருகோணமலையில் வசித்தவருமாகிய அம்பிகாபதி நடேசானந்தன் 03. 05. 1998 அன்று திருகோணமலையில் காலமானார்.

இவர் நாரந்தனை காலஞ்சென்ற அம்பிகாபதி உடையார். திருமதி அம்பிகாபதி ஆகியோரின் அன்பு மகனும், வேலணை காலஞ் சென்றவர்களான சரவணமுத்து (பென்சனியர்) தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லநாயகியின் அன்புக் கணவரும் ரமேஸ், கல்பனா ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07. 05. 1998 வியாழக்கிழமை காலை 9. 00 மணிக்கு இல:57, பிரதான வீதி, திருகோணமலையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருகோணமலை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மைத்துனர்

57, பிரதானவீதி,
திருகோணமலை.

(55769)

## சித்தர் வீரசிங்கம்

(இளைப்பாறிய அதிபர்)

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த சித்தர் வீரசிங்கம் 4-5-98 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிதேவியின் அன்புக் கணவரும், திருமதி க. தவமணி, நவரட்ணராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம், முத்தையன்கட்டு). மகாலிங்கசிவம் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும். கதிர்காமத்தம்பி (அஞ்சல் அலுவலகம், வல்வெட்டித்துறை), மகேஸ்வரி (உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்), கலாவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஸ்ண பிரபா (தேசிய வைத்தியசாலை கொழும்பு), அச்சுதன் அஜிதா, ஜயந்தன், வனசாடிலோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5-5-98 இல் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
க. கதிர்காமத்தம்பி,
(மருமகன்)

''தேவிவாசா,''
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(சி/3658)

## சரவணமுத்து ஆறுமுகம்

மூளாயைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட ச. ஆறுமுகம் 5-5-98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பிரான்ஸில் உள்ளவர்களான கிரிசா, மகேந்திரன், லோகேந்திரன், இராமச்சந்திரன், வத்சலா மற்றும் தனபாலச்சந்திரன், விஷ்ணுபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரான்சில் உள்ளவர்களான மகேந்திரராஜா, கோமளா, பவானி, கருணாதேவி ஆகியோரின் மாமனாரும், சர்மினி, கோபிகா, பிரியந்தினி, நிரோஷன், நிதுரா, லோஜிதா, றொசான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6- 5- 98) புதன்கிழமை பி. ப. 1. 00 மணிக்கு மூளாயில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. விஷ்ணுபாலன்
(மகன்)

கம்மாளை,
மூளாய் மேற்கு,
சுழிபுரம்.

(55779)

## அந்தோனிப்பிள்ளை சேவியர் ஆனந்தராசா

(வயாவிளான்)

வயாவிளானைப் பிறப்பிடமாக கொண்ட சேவியர் ஆனந்தராசா (இளைப்பாறிய நில அளவையாளர்) 02-05-98 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், ஜெயமணியின் (கனடா) கணவரும், புவியரசி, வினோ, ஏழிலரசி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், இரத்தினம்மா (இந்தியா), காலஞ்சென்ற மாகிறேற் மற்றும் மாசிலாமணி (ஆசிரியர், உரும்பிராய் R. C. பத்திநாயகி) உத்தரியநாயகி (ஜேர்மனி), பிலிப் பத்மராசா, தருமராசா — (சுவிஸ்), மகிமைநாயகி காலஞ்சென்ற றோசாபுஸ்பமலர் ஆகியோரின் சகோதரரும், திரு. திருமதி விஜயரத்தினத்தின் மருமகனும், காலஞ்சென்ற மிக்கேல்ராசா, பிரான்சிஸ் சேவியர் (ஜேர்மனி), ஜெயராஜா (பனிக்கன்குளம்), மரியறோசா (எழுதுனர், சுன்னாகம் பிரதேசசபை), நேசராஜன் (கொழும்பு), மேரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், செபரத்தினத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 6-5-98 புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. மாசிலாமணி
(தம்பி)

திரேசம்மா கோயிலடி,
சூராவத்தை,
சுன்னாகம்.

(5577 3)

## சரஸ்வதி தடாகம்

சுன்னாகம், மே 6

இணுவில் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள சரஸ்வதி தடாகம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் க. கனகராசாவால் திறந்துவைக்கப்படும்.

இந்த நிகழ்வில் உடுவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் சிறப்புரை வழங்குவார். (இ-21)

## தமிழ்த்தினப் போட்டிகள்

வலி. தென்மேற்கு, மே 6

சங்கானைக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் ஜி.இராஜநாயகமும், சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரிகளும் பங்குபற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தனர். (இ-185)

## மெய்வன்மை போட்டிகள்

சாவகச்சேரி கல்விக் கோட்ட மெய்வன்மைப் போட்டிகள் நாளை பிற்பகல் 1-30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வியில் நடைபெறும்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கைலைநாதன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக கோட்டக் கல்வி அதிகாரி இ. கணேசன் பங்குபற்றுவார். (இ-3)

## கருவாடு தேக்கம்

கொழும்புக்கு அனுப்புவதற்கென பொதி செய்யப்பட்ட மூன்று லட்சம் ரூபா பெறுமதியான கருவாடு கப்பல் வசதி இன்றி பருத்தித்துறையில் தேக்கமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டாயிரம் கிலோ கருவாடே கப்பல்வசதியின்றி கடந்த சில மாதங்களாக பருத்தித்துறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-5)


லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
பிரசாந்த், ஐஸ்வர்யா, நடித்த
ஜீன்ஸ்
வியாழன் முதல்
கார்த்திக்-மீனா நடித்த
அரிச்சந்திரா
புதிய வெளியீடு
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலை பேசி இல:
070 - 212223
(55326)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்
06-05-98 புதன்
அகல வெண் திரையில்
பிரசாந்த் - ஐஸ்வர்யா
ஜீன்ஸ்
(CD வெளியீடு)
காட்சி 10- 30 — 2-30
(55780)

யாழ்.
றீகல் வெண் திரையில்
10-30 மணி
விஜய், சிம்ரான், சூர்யா
நேருக்கு நேர்
(CD வெளியீடு)
2-30 மணி
பிரசாந் நடித்த
ஜீன்ஸ்
(55786)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரியோசேப்பின் சூசைப்பிள்ளை

சில்லாலையைச் சேர்ந்த திருமதி மேரி யோசேப்பின் சூசைப்பிள்ளை 04-05-1998 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், மரியம்மா, ஸ்கொலஸ்ரிக்கா, புஸ்பம், றஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானப்பிரகாசம் (ஓய்வு பெற்ற பட்டின சபை), கீதபொன்கலன் (முன்னாள் இ. போ. ச. கோண்டாவில்), சூசைப்பிள்ளை ஓய்வுபெற்ற கமநலச் சேவை பெரும்பாக உத்தியோகத்தர்), மரியநாயகம் (ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மாமியும், பிறகேஸ்வரன், றேனுகா, சுரேஸ்வரன், மேனுகா, றெமி, டொனி, றெனாட், நெல்சி, நெல்சன், எல்சி, வின்சன், விமல்சன், விமல்சி, நிமல்சி, டயானா, டயான், றொஷான், திஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வின்சி, ஜெவ்றி, ஜெனிஸ்ரன், பெனிஸ்ரன், பிங்கி, யூட்சன், ஜெருஸ்ணி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 06-05-98 இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்குச் சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. மரியநாயகம்
(மருமகன்)

செபஸ்தியார் வீதி,
சில்லாலை.

(55768)

## கார்த்திகேசு வல்லிபுரநாதன்

(V.K.V)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வல்லிபுரநாதன் 5.5.98 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு தில்லைப்பிள்ளையின் அன்பு மகனும், அன்னலக்சுமியின் அன்பு கணவரும், காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை, சின்னத்துரை, நடராசா, திரவியம்பிள்ளை, செல்வநாயகம், மகேஸ்வரி மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாதேவி, ரவீந்திரன், அனோஜா, நந்தினி, பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகோபால கிருஸ்ண பிரசாத் (கட்டட ஒப்பந்தக்காரர் கிருஸ்ணாஸ்), நித்தியலக்சுமி, உதயகுமார் ஆகியோரின் மாமனாரும், பிரவீனா, சுகன்யா, லாவண்யா, லவபிரசாத் டிலினி, சிந்துஜா, நேரா, செந்தூரி ஆகியோரின் பேரனாரும் யாழினி ராகுலனின் பெரியதகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (5-5-98) நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீ கோபாலகிருஸ்ணபிரசாத்
(மருமகன்)

இல. 11, 6-ம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர் மடம்.

(56765)

## லீனப்பு மனுவல்பிள்ளை

(கனகரட்ணம்)

(இளைப்பாறிய கமநலசேவை உத்தியோகத்தர், உரிமையாளர், ரத்தினா ஸ்ரோர்ஸ்)

இல. 287, பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லீனப்பு மனுவல்பிள்ளை 30-04-98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற றீற்றா பிலோமினாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற திரு. திருமதி மனுவல்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி தங்கரெட்ணம் யோஷேப்பின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற திரு. திருமதி P. S. சின்னத்துரை (அண்ணாவியார்) றெஜீனா தம்பதிகளின் அன்பு மருமகனும், நவரெட்ணராஜா (உரிமையாளர், ரத்தினா ஸ்ரோர்ஸ்), சியாமளா, சுரேஷ் (நோர்வே), பவானி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், அஞ்சலீனா, கிரிஸ்ரி (சவூதி), கீதாஞ்சலி (நோர்வே), மரியநாயகம் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சண்ஜீவ் மற்றும் ஜெயந்தா (திருக்குடும்பக் கன்னியர் மடம்), ரிபூசியஸ் கஜேந்திரன் (பரியோவான் கல்லூரி), லக்ஷிகா (சுண்டுக்குளி, மகளிர் கல்லூரி), பிரியா (நோர்வே), பவித்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (07-05-1998) வியாழக்கிழமை பிற்பகல் 4:00 மணியளவில் (புதியநேரம்) புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
லீ. நவரெட்ணராஜா
(மகன்)

(55784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் மீண்டும் யுத்தம் மூளலாம்!

## பேச்சு முறிந்ததையடுத்து நெருக்கடி

காபூல் மே 6

**ஆப்கானிஸ்தான் தொடர்பான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த போதிலும் சண்டை நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க போரிடும் குழுக்கள் உறுதி பூண்டுள்ளன. எனினும் அங்கு புதிதாகச் சண்டைகள் மூண்டுள்ளன. உள்நாட்டு யுத்தம் மீண்டும் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.**

வடகிழக்கே ரசார் மாகாணத்தில் நடைபெற்ற சண்டையில் 5 துருப்புக்கள் கொல்லப்பட்டனர். 12 துருப்புக்கள் காயமடைந்தனர் என்று பாகிஸ்தானிலுள்ள ஆப்கான் இஸ்லாமிய செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

இதற்கிடையில் பாகிஸ்தானில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததுக்கு இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

எனினும் தலிபான் தரப்பிலான சமாதானப் பேச்சுக்குழுவில் ஏற்படுத்தப்பட்ட மாற்றமே பேச்சுக்கள் முறிவடைவதற்கான முக்கிய காரணமாகும் என எதிர்தரப்புக் கூட்டணி குற்றஞ்சாட்டி வருகிறது.

தலிபான் தரப்பில் சிலர் மேலிடத்தோடு கலந்தாலோசிப்பதற்காக ஆப்கானிஸ்தான் சென்றார்கள். ஆயினும் அவர்கள் மீண்டும் இஸ்லாமாபாத்துக்கு வந்து சேரவில்லை. அவர்களுக்கு பதிலாக இஸ்லாமாபாத்துக்கான தலிபான் பிரதிநிதியே பேச்சுக்களில் கலந்துகொண்டார்.

பேச்சுவார்த்தையின் பழைய உறுப்பினர்கள் இருந்ததாலேயே தாம் தொடர்ந்தும் பேச்சுக்களில் கலந்து கொள்ளப் போவதாக தலிபான் எதிர்ப்புக் கூட்டணி தெரிவித்துள்ளது.

எனினும் பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்த ஐ. நா செயலகமும் இஸ்லாமியக் கூட்டமைப்பும் இது ஒரு தற்காலிக தளர்வே என்றும் இரு தரப்பும் மீண்டும் பேசுவதற்கான சாத்தியங்களைத் தாம் எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளன.

ஆனால் எதிர்காலப் பேச்சுவார்த்தைக்கான திகதி எதுவும் இதுவரை குறிப்பிடப்படவில்லை.

(இ-68)

## ஆல்பிரைட் - நத்தனியாகு 5 மணி நேரம் பேச்சு

### முட்டுக்கட்டை நீக்க முயற்சி

லண்டன், மே 6

மத்திய கிழக்கு சமாதான முயற்சிக்கு மீண்டும் புத்துயிரூட்டும் வகையில் அமெரிக்க வெளி விவகார அமைச்சர் மடெலின் ஆல்பிரைட் இஸ்ரேல் பிரதமர் நத்தனியாகுவுடன் லண்டனில் சுமார் 5 மணி நேரம் பேச்சு நடத்தினார்.

பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பது தொடர்பாக சற்றுக் கூடுதலாகவே நம்பிக்கை வைத்துள்ளதாகவும் —

ஆனால் இதுவரை முன்னேற்றமடைந்திருப்பதாக எந்த ஓர் அறிகுறியும் இல்லை என்றும் — மடெலின் ஆல்பிரைட் சார்பாக பேசவல்ல அதிகாரி ஒருவர் கூறினார்.

மடெலின் ஆல்பிரைட் இப்போது பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தை சந்திக்கவுள்ளார்.

மேற்குக் கரையில் எவ்வளவு விஸ்தீரண நிலத்தை இஸ்ரேலியர்கள் பலஸ்தீனியர்களின் கட்டுப்பாட்டின் கீழ் விடவேண்டும் என்பது குறித்த விடயம் பற்றி லண்டன் பேச்சுக்களில் ஆராயப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தை தேக்கமடைவதற்கு இந்த விடயந்தான் முட்டுக்கட்டையாக இருந்தது. (இ-8)

## இந்தியாவின் மிகப்பெரிய ஏவுகணை

ஜஹார்த்தா, மே 6

இந்தியா சக்திவாய்ந்ததும், மிகப்பெரியதுமான ஏவுகணை ஒன்றை அடுத்த ஆண்டு விண்ணுக்கு அனுப்பவுள்ளது.

இது செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பும் துறையில் இந்தியாவுக்குதனி இடத்தைப் பெற்றுத்தரும் என்று விஞ்ஞான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (இ-8)

உலக அரங்கில்

### ஏவுகணைப் பரிசோதனை

## கிளின்ரன் நிர்வாகம் பாக். மீது தடை

சோரி ஏவுகணையை பாகிஸ்தான் சோதித்துப் பார்த்ததற்காக அதன் மீது தடைகளை விதிக்குமாறு கிளின்ரன் நிர்வாகம் உத்தரவிட்டிருக்கிறது.

வட கொரியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள சில அமைப்புக்கள் ஏவுகணைத் தொழில் நுட்பத்தில் ஈடுபட்டுள்ளன என்றும் —

இதனால் இத்தகைய தடைகளை விதிக்கவேண்டும் என்றும் —அறிக்கை ஒன்றில் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் கான் ஆராய்ச்சிக் கழகமும், அதன் துணைப் பிரிவுகளும் சோரி ஏவுகணைத் தயாரிப்பில் உதவின என்று அமெரிக்கா கூறுகிறது.

பாகிஸ்தானுக்கு ஏவுகணைத் தொழில்நுட்பம் வழங்கிய வடகொரியா அமைப்பு ஒன்றின் மீதும் அமெரிக்க அரசு தடைகளை விதித்திருக்கிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு அமெரிக்கத் தடைகள் அமுலில் இருக்கும்.

(இ-8)


உ

சிவமயம்

# உபநயன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் சித்திரை மாதம் 25 ஆம் நாள் (08-05-1998) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.00 மணி வரையுள்ள (பழைய நேரம்) அத்த நட்சத்திரமும், துவாதசி திதியும், அமிர்தசித்த யோகமும் சுக்கிரபுத ஹோரையும் கூடிய மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புத்திரன்

**சிரஞ்சீவி ஜகஜீவ சர்மா** அவர்களுக்கு

யக்ஞோபவீததாரண பிரம்மோபதேசம் செய்ய முருகன், அம்பாள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

சிவஸ்ரீ ச. ஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள்

ஸ்ரீமதி [illegible]

கந்தசாமி கோயிலடி
மயிலணி, சுன்னாகம்.

(சி/3659)



தெல்லிப்பழை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## கிளைக் குழுத் தேர்தல் - 1998

### தேர்தல் நடைபெறும் கிளைகளின் விவரம்

கிளை இல. 07 - கருகம்பனை
கிளை இல. 25 - மயிலிட்டி கிழக்கு,

**வாக்களிக்கும் இடம்**

தலைமைச் செயலகம், துர்க்காபுரம்,

**திகதியும் நேரமும்**

1998 – 05 – 09 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9–00 மணி தொடக்கம் பிற்பகல் 4–00 மணி வரை [புதிய நேரம்]

குறித்த வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் வாக்களிக்கலாம்.

போட்டியிடுபவர்களின் விவரங்களைச் சங்கக்கிளைகளிலும், தலைமைச் செயலகத்திலும் பார்வையிடலாம்.

சு. கணேசமூர்த்தி.
தேர்தல் உத்தியோகத்தர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

கூட்டுறவு அலுவலகம்,
18/10 வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1698 – 05 – 02

(சி-3661)



# சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

ஜூன் மாத நடுப்பகுதியில் லியோக்களின் எழுச்சி விழாவாகக் கொண்டாடப்படவுள்ள

## "லியோ கருத்தரங்கு"

இந் நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால்
நடத்தப்படும்
லியோ கழக, லியோ கழகங்கள் இயங்கும் பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும்

**"மென்பந்து கிரிக்கெட் போட்டி"**

யாழ். நகர மக்களின் ஏகோபித்த அபிமானம் பெற்ற பல்வகை குளிர்பானங்களின் களஞ்சியம்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

அனுசரணையுடன் நடத்தப்படும் இப்போட்டியில் வெற்றுபெறும் அணிக்கு

**வெற்றிக் கிண்ணம்**

சான்றிதழ்களுடன் பரிசாக வழங்கப்படவுள்ளது.

போட்டி விதிகள்

1. லியோ கழகங்களும், லியோ கழகங்கள் இயங்கும் பாடசாலைகளும் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்கு கொள்வோர் 09-05-1998-க்கு முன்னர் நேரடியாக அல்லது தபாலில் 'தலைவர்' லியோ கழகம் யாழ். பரியோவான் கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
3. ஒரு பாடசாலையில் இருந்து இரண்டு அணிகள் மட்டும் பங்கு பற்றலாம்.
4. 6 பேர் கொண்ட 6 ஓவர் போட்டியாக அமையும்.
5. போட்டிகள் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மைதானத்தில் 20-05-1998, 21-05-1998 ஆம் திகதிகளில் நடைபெறும்.
6. போட்டி பற்றிய விதிகளை யாழ். பரியோவான் லியோ கழகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

போட்டி ஒழுங்கமைப்பு
**லியோ கழகம்**
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**லயன் பா. தவபாலன்**
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி
ஸ்ரீலங்கா

விளம்பர அன்பளிப்பு:-

★ ஸ்பெஷல் ஐஸ்கிறீம் ★ நட்டீஸ் ஐஸ்கிறீம்
★ சொக்கிலேற் ஐஸ்கிறீம் ★ வனிலா ஐஸ்கிறீம்
★ பாலுதா சர்பத் ★ கிறீம் சர்பத் ★ சர்பத்
★ பஷன் கோடியல் ★ நெல்லி கிறஸ் ★ ஒறேஞ்யூஸ்

குளிர்பான வகைகளும்
சகல விதமான சொக்கிலேட், பிஸ்கற், ரொபி வகைகளும், சோடா வகைகளும், சிற்றுண்டிகளும் சுத்தம் சுகாதாரம் இனிய உபசரிப்புடன் வழங்கப்படும்.

தன்னிகரில்லா குளிர் களஞ்சியம்

## லிங்கன் கிறீம் ஹவுஸ்

இல. 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 3652)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுத களஞ்சியம் தீப்பிடிக்க

# சிப்பாயின் கையிலிருந்த குண்டே காரணமாம்

வவுனியா இராணுவ முகாமில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெடி விபத்திற்கு சிப்பாய் ஒருவரின் கையில் இருந்த கைக்குண்டு தவறுதலாக வெடித்ததே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்பால் களஞ்சியத்தில் இருந்த அனைத்துக் குண்டுகளும் வெடித்துச் சிதறின எனவும் ரவைகள் அனைத்தும் சேதமடைந்தன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ–10)

# பட்டதாரி நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்

வலி. தென் மேற்கு, மே6

அடுத்த சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களின்விவரம் வருமாறு;

★ வாக்காளர் பதிவேட்டில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சான்றிதழ்,
★ வதிவிட சான்றிதழ்,
★ பாடசாலை விடுகைப் பத்திரம்
★ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
★ பட்டதாரிச் சான்றிதழ்,
★ கிராம அலுவலரின் நற்சானறிதழ்,
★ ஜி.சீ.ஈ சாதாரணதர, உயர்தரம் போன்றவற்றின் பெறுபேறுகளும் ஒவ்வொன்றின் நிழற்பிரதிகளும்.

(இ–185)

# கல்விக் கண்காட்சி

வடமராட்சி, மே 6

கட்டைவேலி ஞான சாரியார் கல்லூரியின் கல்விக் கண் காட்சி இன்று புதன் கிழமை நடைபெறுகிறது.

இக் கண்காட்சியில் யாழ். கல்வித்திணைக்களம் 2 இன் பணிப்பாளர் எஸ். சிவராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

அதிபர் வே. சிவசிதம்பரம் தலைமையில் இவ் வைபவம் நடைபெறும்.

(இ-173)


# சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

ஜூன் மாத நடுப்பகுதியில் பிராந்தியம் 8இன்
லியோக்களின் எழுச்சி விழா

## லியோ கருத்தரங்கு

இந் நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால் நடத்தப்படும்
லியோ கழகங்கள் இயங்கும் பாடசாலைகள்
லியோ கழகங்களின் உறுப்பினர்கள் பங்குகொள்ளும்

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ். நகரில் விளையாட்டு வீரர்களினதும்,
மாணவர்களினதும் பெரும் நம்பிக்கை
நட்சத்திரமான

## அல்டி

வர்த்தக நிறுவனத்தின் அனுசரணையுடன்
இப்போட்டியின் பரிசுகள்
**வெற்றிக்கிண்ணங்கள்**
சான்றிதழ்களுடன் பரிசாக வழங்கப்படவுள்ளன.

### போட்டி விதிகள்

1. லியோகழகங்களும், லியோகழகங்கள் இயங்கும் பாடசாலைகளும் பங்குகொள்ளலாம்.
2. போட்டியில் பங்கு கொள்வோர் தமது விண்ணப்பங்களை 09-05-1998 ஆம் திகதிக்கு முன்னர் ''தலைவர்'' யாழ்ப்பாண லியோவட்டம், மே/பா. மாவட்ட லியோ தலைவர், 82/5, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர். என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்.
3. போட்டிகள் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில்.
4. போட்டி பற்றிய மேலதிக விதிகளை யாழ்ப்பாண லியோவட்டத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளவும்.

போட்டி ஒழுங்கமைப்பு
**"லியோ கழகம்"**
யாழ்ப்பாண லியோ வட்டம்

**லயன் பா. தவபாலன்**
மாவட்டலியோ தலைவர்
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி. ஸ்ரீலங்கா.

இன்றைய நாகரிக உலகின்
புதிய தயாரிப்புகளான
● பல்வகை மணிக்கூடுகள் ● றேடியோ ● T-V
● வீடியோ டெக் ● ஓடியோ C-D டெக் வகைகள்
மற்றும் விளையாட்டு உபகரணங்களை உத்தரவாதத்துடனும், நம்பிக்கையுடனும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள

## "அல்டி"

இல. 75 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி–3653)


# மணிக்கூட்டு கோபுரம்

நெல்லியடி, மே 6

புலோலி கிழக்கு உத்திராவத்தை ஞானவைரவர் ஆலயத்திற்கு சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் புதிய மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதே இடத்தைச் சேர்ந்தவரும் வெளிநாட்டில் தொழில் பார்ப்பவருமான க. சிவராசசிங்கம் என்பவரது அன்பளிப்பாக இம் மணிக்கூட்டுக் கோபுரம் கட்டப்பட்டு வருகின்றது.

(இ–109)

# மலேயன் ஓய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர். பர்மா, ஓய்வூதியம் பெறுபவர்களின் ஏப்ரல் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினரால் நேறறு முன்தினம் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ–100)

# கருத்தரங்கு

சுழிபுரம், மே 6

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி கலை மன்றத்தினர் நடத்தும் உயர் வகுப்பினருக்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

''சைவசித்தாந்தம்'' என்னும் விடயம் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீமதி கலைவாணி இராமநாதன் விரிவுரையாற்றுவார்.

(இ–28)

# கணித, விஞ்ஞான தினம்

யாழ்ப்பாணம், மே 6

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய கணித, விஞ்ஞான தினம் இன்று காலை 9 30 மணிக்கு வித்தியாலய அதிபர் சு. சண்முககுமார் தலைமையில் நடைபெறும்.

வலயம் ஒன்றின் முதன்மை ஆசிரியர்களான எஸ். ரவீந்திரநாதன் (விஞ்ஞானம்) என். மகாநாதன் கணிதம்) ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும்.

(இ–7)

# மலசலகூடம் அமைப்பு

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் இன்றரக்கழகம் இக்கல்லூரி மாணவர்களின் மலசல கூடம்இல்லாத குறையை நிவர்த்திக்க, பத்து அறைகள் கொண்ட நீரிறக்கி மலசல கூடம் அமைக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறது.

அதிபர் கு. சண்முகநாதனின் வேண்டுகோளை அடுத்தே இப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

(இ-90)

# குடிசைகள் தீக்கிரை

உரும்பராய், மே 5

இடம்பெயர்ந்து வாழும் அகதிகளின் இரு குடிசைகள் தீப்பற்றி எரிந்து சாம்பராயின.

உடுவில் கிழக்கில் அமைந்துள்ள அகதிகள் முகாமில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உரிய நேரத்தில் தீ பரவாது தடுக்கப்பட்டதனால் முகாமின் ஏனைய குடிசைகள் பாதுகாக்கப்பட்டன. குடியிருப்பாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

(இ-154)


## யாழ். நகரில் முதன் முதலில்...

கம்பியூட்டர் முறையில் வடிவமைக்கப் பெற்ற விசிட்டிங்காட் முதல் பெரிய அளவிலான போஸ்டர்கள் வரை அழகிய முறையில் பல வர்ணங்களில்

"ஸ்கிறீண்பிரிண்ட்"
மூலம் பெறவும்

சிறிய அளவிலான இலக்கத்தகடு முதல் பெரிய அளவிலான பெயர்ப்பலகைகள் வரை பிளாஸ்ரிக் மூலம் செய்து பெற்றிடவும் நீங்கள்நாட வேண்டிய ஸ்தாபனம்...

# JASO PLASTIC [PVT] LTD.

KALAIMAGAL VEETHY,
NALLUR NORTH,
JAFFNA.

(55770)



# சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா.

ஜூன் மாத நடுப்பகுதியில் இளம் லியோக்களால்
கொண்டாடப்படவுள்ள எழுச்சி விழா

## லியோ கருத்தரங்கு

இந்நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால்
நடத்தப்படும்
லியோகழகங்கள் இயங்கும் பாடசாலைமாணவிகளும்
லியோ கழக பெண்களும் கலந்து கொள்ளும்

## ''வலைப் பந்தாட்டப் போட்டி''

யாழ். நகரில் தரம்மிக்க பேப்பர் வகைகளையும்,
எசென்ஸ் வகைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் வழங்குபவர்கள்

**பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்**
**& பேப்பர் மேர்ச்சன்ட்**

அனுசரணையுடன் நடைபெறும் இப்போட்டியில்
**வெற்றிக் கிண்ணங்கள் சான்றிதழ்களுடன்**
பரிசாக வழங்கப்படவுள்ளன.

### போட்டி விதிகள்

1. லியோ கழக பெண்களும், லியோ கழகம் இயங்கும் பாடசாலை மாணவிகளும் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம்.
2. வயதெல்லை 15 — 28
3. விலகல் முறையில் போட்டி அமையும்.
4. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 09-05-1998 ஆகும்.
5. விண்ணப்பங்களை தலைவர்லியோக்கழகம் யாழ். இந்து மகளிர் கல்லூரி என்ற முகவரிக்கு காலை 9.00 மணியில் இருந்து பிற்பகல் 2,00 மணிக்கு இடையில் நேரில் அல்லது தபாலில் ஒப்படைக்கவும்.
6. போட்டிகள் 18-05-1998 ஆம், 19-05-1998 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.
7. போட்டி பற்றிய நேரம் மற்றும் மேலதிக விவரங்களை யாழ். இந்து மகளிர் கல்லூரி லியோ கழகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

போட்டி ஒழுங்கமைப்பு
**லியோ கழகம்**
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி,
ஸ்ரீலங்கா.

விளம்பர அன்பளிப்பு:

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இன்று
புகழ் பெற்ற நிறுவனமாகிய

# பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

★ றோணியோ பேப்பர் ★ ரைப்பிங் சீற்
★ போஸ்டர் பேப்பர் ★ நியூஸ் பிரிண்ட்
★ பாங் பேப்பர் ★ ரிசுப் பேப்பர்
★ பொக்ஸ்போட் ★ சிப்போட்
★ பிறிஸ்ட்டல் போட்
போன்ற பேப்பர் வகைகளையும்

மை, ரோணியோ மை வகைகளையும்
ஐஸ்கிறீம், கேக், குளிர்பானம். பிஸ்கற், இனிப்பு
சொக்கிலேட், ரொபி வகைகளையும் பெற
நாடவேண்டிய ஸ்தாபனம்

**பெட்டா எசென்ஸ் சப்ளையர்ஸ்**
104, (298) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(சி/3654)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு வைபவம்

அகில இலங்கை சைவப்புல வர்கள் சங்கமும், பழனி ஆனந்த இல்லமும் கூட்டாக இணைந்து நடத்திய சைவப் புலவர், சிவசிதம்பரம் திரு நாவுக்கரசுவின் ''மானிப் பாய் மருதடி விநாயகர் சத மாலை'' நூல் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் ஆலய மண்ட பத்தில் சிறப்பாக நடை பெற்றது. (இ-30)


# அமரர் சிறீசபாரெத்தினம்

மற்றும்

# போராளிகளினதும்

## நினைவஞ்சலிப் பொதுக்கூட்டம்



தலைமை: திரு. செ. பத்மநாதன்

நாள்: 06 – 05 – 1998

இன்று புதன்கிழமை

நேரம்: பிற்பகல் 4. 30 மணி

இடம்: நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில்

உரை நிகழ்த்துவோர்

திரு. ந. சிறீகாந்தா
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்-சட்டத்தரணி)

ஜனாப் எம். கே. அபுயூசுப்
(பிரசாரச் செயலாளர், ரெலோ)

திரு. எம். கே. சிவாஜிலிங்கம்
( முதல்வர் – ரெலோ )

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

TELO

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)

(55736)



# COMPUTER POINT
(COMPUTER TRAINING DIVISION)




REGD NO; J/DS/BR/63/97

NO: 28, ST. PATRICK'S ROAD, JAFFNA.

COMPUTER COURSES

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

10 - 05 - 98, 11 - 05 - 98, 16 - 05 - 98

LECTURES BY:-

S. R. LOGENDRA (D C. A)
(SYSTEMS ANALYST M. C S INDIA)

★ G. C. E. O/L, A/L மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள். தொழில் புரிவோர் ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள் கூடிய செய்முறைப்பயிற்சிகளுடன் நடைபெறும்.

★ வார நாள்களிலும், சனி, ஞாயிறு நாள்களிலும் வகுப்புக்கள் நடைபெறும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகி

(55763)


## சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 6

காரைநகர்- கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ சண்முகானந்த சபையினால் நடத்தப்பட்டு வரும்தொடர் சமயச் சொற்பொழிவில் இன்று புதன் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய ஆசிரியர் சைவப்புலவர் க. சத்தியதாசன் ''காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்'' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

நாளை வியாழன் கல்வி வலயம் ஒன்றைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர் பிரம்மஸ்ரீ ம. ஜெயராமசர்மா ''திருப்பம்'' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (இ-7)

## விவசாய உற்பத்தி கொள்வனவு

அரியாலை, மே 6

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குகூட்டுறவுச்சங்கம்உள்ளூர் விவசாயிகளிடம்இருந்து வெங்காயம், கௌபி. மிளகாய் போன்றவற்றை நியாய விலையில் கொள்வனவு செய்து வருகின்றது

அதேபோன்றுஅளவெட்டி, மல்லாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கமும் அப்பகுதி விவசாயிகளிடம் இருந்து விவசாய உற்பத்தியில் பொருள்களைப் கொள்வனவு செய்து வருகிறது. (இ-17)

## ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டுகளில் யாழ். மாவட்ட திணைக்களங்களின் செயற்பாடுகள் குறித்தும், இந்த வருடத்தில் எடுக்கப்படவேண்டிய அபிவிருத்தி முயற்சிகள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ·7)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 6

மதுரை தமிழ்ச்சங்கப் பண்டிதை ஸ்ரீமதி ந. பத்மாசனி அம்மாள் இயற்றி 1925 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புலோலிப் பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்து பத்தந்தாதியின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழா புலோலி பர்வதவர்த்தனி கலாமண்டபத்தில் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு இடம் பெறும்.

பட்டயக் கணக்காளர் அ. சோமசுந்தரம் பிள்ளை தலைமையில் சுவாமி சித்ருபானந்தாவின் ஆசியுரையுடன் விழா ஆரம்பமாகும்.

இவ் விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

நூல் பற்றிய ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக வரவு விரிவுரையாளர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியனும் நிகழ்த்துவார்கள்.

விழாவில் நூலில் உள்ள [illegible] சங்கீதகலாவித்தகர் சரஸ்வதி [illegible] பாடுவார். (இ-6)

## கூட்டுறவு அபிவிருத்தி ஊழியர்களுக்கு பயிற்சி

அரியாலை, மே 6

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த பல தரப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வடக்கு — கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி திணைக்களத்தினால் பல்வேறு பயிற்சி நெறிகள் நடத்தப்பட உள்ளன.

கூட்டுறவு திணைக்களத்தில் எழுதுவினைஞர், அதிசிறப்பு எழுதுவினைஞர் தரத்தில் உள்ள 30 பேருக்கு மதிப்பீடுகள் தயாரித்தலும் நிர்வாகமும் பற்றிய செயலமர்வு மூன்று நாள்களும்—

சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள் 25 பேருக்கு மூன்று நாள்கள் பயிற்சியும் —

30 பேருக்கும் சாரதி பணிக்கான பயிற்சிகள் நான்கு நாள்களும் —

கனிஷ்ட தர ஊழியர்கள் 30 பேருக்கு இரண்டு நாள் பயிற்சியும் —

வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் 30 பேருக்கு இரண்டு நாள் பயிற்சியும்—

கேள்விப்பத்திர நடைமுறை பற்றி 30 பேருக்கு மூன்று நாள் பயிற்சியும் — வழங்கப்படவுள்ளன.

தமிழ் மொழி மூலம் அளிக்கப்படும் இந்தப் பயிற்சி நெறிக்கு யாழ். கூட்டுறவு திணைக்களத்தில் பணி புரியும் ஊழியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-17)


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ·து)
சுன்னாகம்.

# அறிவித்தல்

யாழ். போதனா வைத்தியசாலையில் எம்மால் நடத்தப்படும் தேநீர்ச் சிற்றுண்டிச்சாலைக்கு தேநீர் தயாரிப்பாளர் உடன் தேவை. விரும்புவோர் 09-05-98 ஆம் திகதிக்குள் நேரில் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித்தீர்த்துக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம். 05. 05. 98

(சி-3651)



LEO

# சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

# லியோ கருத்தரங்கு

நிகழ்வை யொட்டி
மாவட்ட லியோ தலைவரால்
நடத்தப்படும்

## "ஓவியப் போட்டி"

''கண்பார்வைக்கு முதலிடம்''

1 ஆம் பரிசு - ரூபா 1500-00
2 ஆம் பரிசு - ரூபா 1000-00
3 ஆம் பரிசு - ரூபா 750-00

சான்றிதழ்களுடன் கூடிய ஆறுதல் பரிசுகள் பத்து

''ஓவியப் போட்டி'' விதிகள்

1. ஓவியப் போட்டி தலைப்பு:- கண்பார்வைக்கு முதலிடம்.
2. அளவு – நீளம் 22 அங்குலம் அகலம் 15 அங்குலம் கொண்ட அட்டையில் வரையப்பட வேண்டும்.
3. விரும்பிய வர்ணத்தைப் பயன் படுத்தலாம்.
4. பாடசாலைகளில் ஆண்டு 10 ஆண்டு 11 ஆண்டு 12 வகுப்புக்களில் பயிலும் மாணவர்கள் பங்கு பற்றலாம்.
5. மாணவர்கள் தங்களின் ஆக்கங்களை அவர்களது சுய ஆக்கமென பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பினால் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படும்.
6. போட்டிக்கான முடிவு திகதி 25 – 05 – 1998 ஆகும்.
7. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

போட்டியில் பங்கு கொள்வோர் ஓவியங்களை தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்ப வேண்டிய முகவரி.

''ஓவியப் போட்டி''
மாவட்ட லியோ தலைவர்
82/5. நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி,
ஸ்ரீலங்கா.

விளம்பர அன்பளிப்பு

பார்வைக்கு முதலிடம் வழங்குவதில் யாழ். நகரில் தன்னிகரில்லா முன்னணி வகிக்கும் மூக்குக் கண்ணாடி நிபுணர்கள் அழகிய பிறேம் வகைகள், கூலிங்கிளாஸ் வகைகள் என்பவற்றை உத்தரவாதத்துடனும், நாணயத்துடனும் விருப்பத்திற்கேற்பவும் நாகரிக மாற்றத்திற்கேற்பவும் தெரிவு செய்ய

# எஸ். எம். பெர்னான்டோ

இலக்கம் 580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அண்மையில்)
யாழ்ப்பாணம். (சி3356)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சூராவத்தை அம்மன் கோயில் அருகில் இரண்டு காணி விற்பனைக்கு உண்டு. நீதியான விலை. தொடர்பு: சாரதாசேவாச்சிரமம், /ருத்தித்துறை. [55748]

40அடி நீளமான சொக்கட்டான் தகரப்பந்தலும், 200 கதிரைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. தேவராசா, நுணாவில்கிழக்கு. கல்வயல். சாவகச்சேரி. [சி/3643]

கடைச் சுருக்குக் கேற்றுக்குரிய பூட்டுக்கள், கைபிடிகள், கொண்டிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 325, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [55766]

வியாபாரி மூலை பிரதான வீதியில் காணி வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் பொ. சிவலிங்கம், பதுவளை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. [55745]

## தவறிவிட்டது

சோ. தவமணி என்பவருடைய 45637170V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள். ந. சோமரட்ணம் பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும், [55401]

வீட்டுத் தளபாடங்கள், பெட்டகம் உட்பட மின் உபகரணங்கள், குசினிச் சாமான்கள், எவர்சில்வர், புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 11/1, நாயன்மார் வீதி, நல்லூர் (முத்திரைச்சந்தைக்கு அருகில்). [55783]

சுப்பிரமணியம் யோகலிங்கம் என்பவரது 582673209V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன அரியாலைக்கும், திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராசா மண்எண்ணெய்க் கடையில் (வைரவர் கோயில் முன்பாக) ஒப்படைக்கவும். [55756]

## வீடு வாடகைக்கு

வைமன் வீதியில் இல. 34/1, 37/2 க்கு உரிய இரண்டு வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: T. தம்பிநாதன் 37/1, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (தினசரி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சந்திக்கலாம்). [55762]

## தவறிவிட்டது

இணுவில் கோயில் வாசலுக்கும், மருதனார் மடம் சந்திக்குமிடையில் கைப்பையுடன் சிகை அலங்கரிப்புச் சாதனங்களும், சிறிய றேடியோவும் 04 - 05 - 98 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மருதனார்மடம், பிள்ளையார் ஸ்ரோர்ஸ் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (55764)

## நாளைய சந்ததி நிகழ்வில்

எதிர்வரும் சனிக்கிழமை இரவு 9.30மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பாக உள்ளநாளைய சந்ததி நிகழ்ச்சியில் மானிப்பாயில் இருந்து வெளிவரும் 'இறைதூதன்'' என்ற பத்திரிகையில் பிரசுரமான சிறுகதை ஒன்று ஒலிபரப்பப்பட உள்ளது.

(இ-9-10)

*நினைவூட்டுகின்றோம்!*

**மாதாந்த பயிற்சிப் பரீட்சை**

நாடு பூராகவும் 11-5-98 திங்கள் காலை 8.30 மணிக்கு ஆண்டு 2 முதல் 11 வரை.

**BOND**

யாழ்ப்பாணம்.

(55728)

# 31 ஆம் நாள் அஞ்சலி



**திருமதி வாலாம்பிகை கார்த்திகேசன்**

| மலாயாவில் தோற்றம்: | யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் மறைவு: |
|---|---|
| **22-10-1921** | **06-04-1998** |

கொள்கை வழுவாக் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் துணைவியாக 56 ஆண்டுகள் வாழ்ந்து பொதுநலம் மேவிய இல்லறத்தில் ஈடுபட்ட ஒப்பிலாச் சீர்பெறு நங்கை திருமதி வாலாம்பிகை கார்த்திகேசன் நினைவாக......

எங்கள் அம்மாவின் இழப்பின் போது பல்வழிகளிலும் பங்குபற்றி ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றி.

திருமதி ராணிரத்னதேவி
சின்னத்தம்பி.

வட்டுக்கோட்டை,

(55289)

# சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

**லியோ கருத்தரங்கு**

நிகழ்வையொட்டி

மாவட்ட லியோ தலைவரால் நடத்தப்படும்

## கட்டுரைப் போட்டி

## 2000-ம் ஆண்டில் தலைமைத்துவம்

1 ஆம் பரிசு - ரூபா 1500. 00
2 ஆம் பரிசு - ரூபா 1000. 00
3 ஆம் பரிசு - ரூபா 750. 00

சான்றிதழ்களுடன் கூடிய ஆறுதல் பரிசுகள்பத்து

**கட்டுரைப்போட்டி விதிகள்**

1. கட்டுரைப் போட்டி தலைப்பு - ''2000 ஆம் ஆண்டில் தலைமைத்துவம்''
2. கட்டுரைகள் அழகான கையெழுத்தில் அல்லது தட்டச்சில் தாளின் ஒருபக்கத்தில் .. ......... சொற்களுக்கு மேற்படாது எழுதப்பட வேண்டும்.
3. வயதெல்லை இல்லை. ஆனால் பாடசாலை மாணவர்களே பங்குபற்றலாம்.
4. ஆக்கங்கள் தமது சுயமான ஆக்கமென தமது கல்லூரி அதிபர் மூலம் உறுதிப்படுத்தி வரும் ஆக்கங்களே போட்டியிற் சேர்த்துக் கொள்ளப்படும்.
5. ஆக்கங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படமாட்டா.
6. போட்டிக்கான முடிவு திகதி 25 - 05 - 1998.
7. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

போட்டியில் கலந்து கொள்வோர் கட்டுரைகளை நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்க வேண்டிய முகவரி.

'கட்டுரைப் போட்டி'
மாவட்ட லியோ தலைவர்
இல. 82/5, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

விளம்பர அன்பளிப்பு

''48'' வருடகாலமாக யாழ்ப்பாணம் இலக்கம் 50, கஸ்தூரியார் வீதியில் மக்களின் நன்மதிப்புடன் வர்த்தகத்துறையில் பெரும் சேவையாற்றி வருபவர்கள்

● L. M. L. வெஸ்பா ஸ்கூட்டர்கள், ● பஜாஜ், ஹொண்டா, சாளி, யமஹா: சுசுக்கி மோட்டார் சைக்கிள்கள் ● லுமாலா, ஏசியா துவிச்சக்கர வண்டிகள் ● சகல வகை ஜெனரேட்டர்கள் ● பெயின்ற்வகைகள் ● ஹாட்வெயர் பொருள்கள் ● றேடியோக்கள் இன்னும் பற்பல பாவனைப் பொருள்களின்

தெரிவுக் களஞ்சியம்

## இ. எஸ். பேரம்பலம் சக நிறுவனம்

இல. 50, கஸ்தூரியார்
யாழ்ப்பாணம்.வீதி,
தொலைபேசி இலக்கம். 2988

(சி/ 3355)

யே, ம. சூ. துணை

# ருது சோபன அழைப்பு

நிகழும் 1998 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரையுள்ள சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி

**செல்வி ஜோகலஸ்ரீன் (கவிதா)**

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழாவை சட்டநாதர் வீதியிலுள்ள இளங் கலைஞர் மன்றத்தில் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசிர்வதித்து மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. கியோமர் மரியதாஸ் [பட்டு]
(பல்கலைக்கழக பா. உ)
திருமதி மேரி ஹெலன்
(சுன்னாகம் சைவ மயிலணி மகாவித்தியாலய ஆசிரியை)
மகன் ஜோதிரோஜன்.

தற்காலிக முகவரி:
12/3, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

(55727)

# ஓராண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில்: | ஈசனின் கையில்: |
|---|---|
| 03 | 02 |
| 07 | 05 |
| 1945 | 1997 |



அமரர்

**மூ. கந்தையா [சாம்]**

(சாரதி)

வாழ்க்கை இனித்திடவேஇணைந்தபேரொளியே!
எங்கு நீ சென்றாய் எம்மை ஏன் பிரிந்தாய்?
அப்பா நீங்கள் ஓராண்டு சென்றாலும்
ஓராயிரம் ஆண்டு தான் சென்றாலும்
உங்கள் நினைவலைகள்
எம்மை விட்டு என்றும் பிரியாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(55734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போரும் வாழ்வும்

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில்–பேச்சு வார்த்தை மூலம்– அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதனை விட, இராணுவத் தீர்விலேயே அரசாங்கத்துக்கு அதிக நாட்டமும் ஈடுபாடும் உண்டு என்பதனை இப்போது பொதுவாக எல்லோருமே உணர்ந்து வருகின்றனர். அரசின் ஒவ்வொரு செயற்பாடும் அதனையே உறுதி செய்கிறது.

படை பலத்தை மேலும் பெருக்குவதிலும், அர்த்தமுள்ள இலக்கோ கால அட்டவணையோ இல்லாது போரைத் தொடர்வதிலும் காட்டும் அக்கறை அரசியல் தீர்வுப் பொதியை முன்னெடுப்பதில் இல்லை.

இந்த அணுகுமுறையின் முழு நோக்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது அல்லது பலவீனப்படுத்துவது; அதன் பின்னர் அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழர்கள் மீது திணிப்பது என்பதாகவே தோன்றுகிறது.

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தை அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வருவதன் உள்நோக்கமும் அதுவே.

வடக்கு– கிழக்கில் நடைபெறும் போரில் சிங்கள ஏழை மக்களின் பிள்ளைகளே சாகிறார்கள். இப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய சகல தரப்பினரும் அரசுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தர வேண்டும்—என்று ஜனாதிபதி மேதினக் கூட்டத்தில் நிகழ்த்திய பேச்சு வெளிவந்த அடுத்த நாளே—

தென்னிலங்கையில் உள்ள பாடசாலைகளில் பிரசாரம் செய்து பதினையாயிரம் மாணவரைபடையில் சேர்க்க இராணுவம் நடவடிக்கை எடுத்துவருகிறது என்ற தகவல் வந்திருக்கிறது!

அது மட்டுமா?

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் அதில் இணைவதற்கு எதிர்வரும் பத்தாம் திகதி வரை மற்றும் ஒரு தடவை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

டி. பி. விஜேதுங்காவின் பதவிக் காலத்தில் இராணுவத்தில் இருந்து தப்பியோடியோரின் எண்ணிக்கை 21,000 பேர் என்று கணக்கிடப்பட்டிருந்தது. இப்போதைய எண்ணிக்கை 19,000 பேர்! கூட்டிக் கழித்துப் பார்த்தால் கடந்த நான்கு வருடங்களில் 2,000 பேர் மட்டுமே பொது மன்னிப்பைப் பயன்படுத்தி இராணுவத்தில் மீண்டும் சேர்ந்துள்ளார்கள்,

தப்பியோடியவர்களை ஈடுசெய்யவே பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவரைப் படைக்குத் திரட்ட ஏற்பாடாகி வருகிறது.

எவ்வளவு வசதிகள் சலுகைகளை வழங்கினாலும் படையில் பணிசெய்து மாள்வதற்கு சிங்கள இளைஞர்கள் மனதார விரும்பவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

அவ்வாறிருக்க—

பாடசாலைகளில் படைக்கு ஆள் திரட்ட அரசு முனைந்திருப்பது, சிங்கள இளைஞர்கள் மீதும் போரைத் திணிப்பதற்குச் சமனாகும். போரே இனி வாழ்க்கை என்று ஆக்குவதுமாகும்!

# மாணவர்களுக்கு மன அழுத்தம் உண்டாக்கும் பாடச் சுமைகளும் ரியூசன் வகுப்புக்களும்

ஒருவரது சுமக்கும் திறனுக்கு அதிகமான சுமையை அவரது தலையில் சுமத்தக் கூடாது. ஆனால் எமது நாட்டில் மாணவர்களின் ஆற்றல் எல்லைக்கு அதிகமாகவே பாடச்சுமை சுமத்தப்பட்டுள்ளது. இந்நிலை நீடிப்பது நாட்டில் அறிஞர்கள் பலர் தோன்றுவதற்குப் பதிலாக உளநோயாளிகள் பலர் தோனறவே வழிவகுக்கும்.

அபிவிருத்தியடைந்த மேற்குலக நாடுகளின் அரசுகள் மாணவர்களது உள நலம் பேணுவதில் அதிக அக்கறை காட்டுகின்றன. மாணவர்களின் ஆற்றல் எல்லையை மதிப்பிட்டு அதற்கு அமையவே பாடப்பரப்பை நிர்ணயிக்கின்றன. மேலும் தகுதி பெற்ற மாணவர் அனைவருக்கும் உயர்கல்வி வாய்ப்பை வழங்குகின்றன. இதனால் அந்த நாடுகளிலுள்ள மாணவர்கள் உள நலம் மிக்கவர்களாக விளங்கி ஆர்வத்துடன் கல்விகற்கின்றனர்; நாட்டின் அபிவிருத்திக்குத் துணைபுரிகின்றனர்.

ஆனால் எங்கள் நாட்டில் க. பொ. த. (சாதாரணம), க. பொ. த. (உயர்தரம்) ஆகிய வகுப்புக்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பாடப் பரப்புகள் மிகவும் பரந்தனவாக இருக்கின்றன. இவ் வகுப்புகளில் கல்விபயிலும் மாணவர்கள் பாடச் சுமையைச் சுமக்கமுடியாது திண்டாடுகின்றனர்; தடுமாறுகின்றனர். இச்சுமைஅவர்களுக்கு கல்வியில் வெறுப்பை ஏற்படுத்துகின்றது: உளப் பாதிப்பை உண்டாக்குகின்றது.

எங்கள் நாட்டில் ஒவ்வொரு முறையும் பதவிக்கு வரும் அரசுகள புதுமையான கல்வித்திட்டத்தைக் கொண்டு வருவதாகக் கூறுகின்றன. ஆனால் பாடச் சுமையைக் குறைப்பதில் அதிக ஆர்வம் காட்டாது வேறு சில மாற்றங்களைத் தாம் விரும்பியபடி மேற்கொள்ளுகின்றன. உயர் கல்வி பெறத் தகுதிபெற்ற அனைவருக்கும் உயர்கல்வி வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. இதனால் மாணவர்கள் விரக்தியடைகின்றனர்.

### மாணவர் மன அழுத்தம்

மேற்குலக நாடுகளிலுள்ள பெற்றோர், உளவியல் அறிவு பெற்றிருப்பதால் பிள்ளைகளைப் படிக்குமாறு எல்லா வேளைகளிலும் நச்சரிப்பதில்லை. மாறாக எங்கள் நாட்டிலுள்ள பெற்றோர் மத்தியில சராசரியாக உளவியல் அறிவு குறைந்து காணப்படுவதாலும் உயர் கல்வி நிறுவனங்களின் அனுமதிக்கு நிலவும் அதீத போட்டி காரணமாகவும் பிள்ளைகளை எப்பொழுதும் படிக்கும்படி நச்சரிக்கின்றனர். அத்துடன் மாணவர்களுக்கு ஓய்வு நேரமே கிடைக்காத வகையில் மேலதிக ரியூசன் வகுப்புகளுக்கும் ஏற்பாடு செய்து விடுகின்றனர். இதனால் மாணவர்களின் மன அழுத்தம் மேலும் மிகைப்படுகிறது.

## இவற்றைக் குறைக்க நடவடிக்கை தேவை

ச. அ. கோபாலமூர்த்தி

மாணவர்களே, தாங்கள் கல்விச் சுமையைத் தாங்க முடியாது திணறுவதாக அவ்வப்போது சொல்வதுடன் நின்று விடுகிறார்கள் க. பொ. த. (சாதாரணதர) வகுப்பு மாணவர் மன்றங்கள் கல்லூரி எல்லைக்குள் சில நிகழ்வுகளை நிகழ்த்துவதுடன் நின்றுவிடுகின்றன. க.பொ.த. (உயர்தர) வகுப்பு மாணவர் மன்றங்கள் ஒரு படிமேல் சென்று அயற்கல்லூரி மாணவர்களையும் அழைத்து வருடாந்த விருந்து வைபவங்களை நிகழ்த்துவதுடன் நின்று விடுகின்றன.

'மாணவர் சக்தி மகத்தானதுஎன உணர்ந்து சமூகத்திற்குப் பயன் தரும் பல்வேறு நடவடிக்கைகளிலும் மாணவர் மன்றங்கள் ஈடுபட வேண்டும். பாடச்சுமையைக் குறைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றிக் கல்வி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும்.

மாணவர் மன்றங்களால் நாடளாவிய வகையில் பாட விதானத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்று ஐயுறக் கூடாது.

நாம் பயின்ற காலத்தில் க.பொ.த. (உயர்தர) வகுப்புப் பாட விதானத்தில் உயிரியல் பாடத்திற்கான கற்பித்தல் பரப்பில் எலியின் உடற் கூற்றியலே இடம் பெற்றிருந்தது. இதனை மாற்றி மனித உடற் கூற்றியலைப் பாடப் பரப்புக்குள் சேர்க்க வேண்டும் எனத் தீர்மானித்தோம். க. பொ. த. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகள் அக்காலத்தில் தரங்களாகவே வெளியிடப்பட்டன. இப்பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளும் வெளியிடப்பட வேண்டும் எனத் தீர்மானித்தோம். க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கான விஞ்ஞானப் பாடப்பரப்பில் மனித இனப் பெருக்கத் தொகுதி சேர்க்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தோம். இம் மூன்று தீர்மானங்கள் தொடர்பாகவும் கல்வி அமைச்சர், பரீட்சை ஆணையாளர் போன்றோரை நேரில் சந்தித்து விடயத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். அவர்கள் இவ் விடயங்கள் தொடர்பாக ஆலோசிக்கின்றோம்; ஆலோசிக்கின்றோம் எனக் கூறிக் காலத்தை இழுத்தடித்த போதிலும், சலிக்காது பல தடவைகள் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தியதன் பயனாக எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இதன் பயனை இன்றைய மாணவ சமூகம் அனுபவித்து வருகிறது.

எனவே மாணவர் மன்றங்கள் பாடப்பரப்பில் தமக்குச் சுமையாகவுள்ளனவும் அதிக பயன்பாடற்றவையுமான பகுதிகளைஇனங்கண்டுஅவற்றை நீக்கிப் பாடச் சுமையைக் குறைக்குமாறு கல்வி அமைச்சைக் கோர வேண்டும்.

அண்மையில் சிங்கப்பூர் அரசு மாணவர்களின் பாடத் திட்டத்தை 30 வீதத்தால் குறைத்ததையும், இந்திய அரசு பாடத்திட்டத்தைக் குறைப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமித்ததையும் வானொலி மூலம் மாணவர்கள் அறிந்திருப்பார்கள். இவற்றையும் சுட்டிக்காட்டி மாணவர் மன்றங்கள் தமது கருத்தை முன்வைத்துப் பயன்பெற வேண்டும்.

'தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலி தரும்'.

★

# யாழ். பொருளாதார விருத்தியில் கடற்றொழில், கால்நடை வளர்ப்பு

## இவை இரண்டுமே முன்னணியில் என்கிறார் கூ. ஆணையாளர்

யாழ்ப்பாணம், மே 6

கடற்றொழில், கால்நடை வளர்ப்பு ஆகிய இருதுறைகளும் யாழ். மாவட்ட பொருளாதார விருத்தியில் முதன்மை பெறும் துறைகள் ஆகும்.

இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் க. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கால் நடை வளர்ப்பு பாலுற்பத்தியில் ஈடுபட்டுள்ள யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றிய கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது:-

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி வருமானம் தரக் கூடிய தொழில்களை முன்னுரிமை அளித்து வளர்த்தல் இன்றைய தேவை ஆகும். கடற்றொழில், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு போன்றவற்றால் குடும்ப வருமானத்தை உடனடியாகப் பெருக்க முடியும்.

புதிய கருத்திட்டங்களை செயற்படுத்த முன்வரும் நிறுவனங்கள் இவ்விரு துறைகளுக்கும் முதன்மை இடம் அளிக்க முன் வந்துள்ளன.

தற்பொழுது யாழ். மாவட்ட மக்களின் போஷாக்கு தரத்தை உயர்த்துவது முதன்மையான தேவைகளில் ஒன்றாகும். புரத உணவில் நுகர்வாளரை நாம் உடனடியாகக் கூட்ட வேண்டும்.

முட்டை, இறைச்சி, பால், மீன் ஆகிய உணவுப் பொருள்கள் எந்தளவுக்கு தாராளமாகக் கிடைக்கிறதோ அந்தளவுக்கு போஷாக்குத்தரம் உயர்வடையும். இதனால் இத்துறைகளின் விருத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இவ்விரு துறைகளிலும் விளைவிக்கப்படும் உற்பத்திகள் உள்ளூர் மட்டத்திலேயே நுகாவுக்குப் பயன்படுகின்றன.

உற்பத்தியாளர்களே தம் உற்பத்தியில் ஒரு பகுதியை தம் சொந்த தேவைகளுக்கு உபயோகிக்கிறார்கள். மீதியை உள்ளூர்ச் சந்தையில் விற்கிறார்கள்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் 1994 ஆம் ஆண்டில் 8 லட்சம் லீற்றர் பாலை உற்பத்தியாளர்களிடம் சேகரித்தது. இப்பால் முழுவதும் குடா நாட்டிலுள்ள நுகர்வாளர்களுக்கே மீள விநியோகிக்கப்பட்டது.

1998 ஆம் ஆண்டிலும் இச்சங்கம் பால் உற்பத்தியில் எட்டுலட்சம் லீற்றர் என்னும் இலக்கை அடைவதற்கு திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் ஏனைய மாவட்டங்கள் சிலவற்றில் சேகரிக்கப்படும் பால் நெஸ்லே, மில்க்கோ போன்ற கம்பனிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு மாவட்டத்துக்கு வெளியே செல்கிறது. யாழ். மாவட்டத்தில் 100சதவீத உற்பத்தியும் உள்ளூர் பாவனையாளர்களுக்கே பயன்படுத்தப்படுவது சிறப்பம்சமாகும்.

உற்பத்தி செயற்பாட்டினைக் கொண்டு இயக்குவதற்கு நிறுவன அமைப்புகள் அவசியம். கூட்டுறவுச் சங்கங்களே இதற்கு ஏற்றவை. கடற்றொழிலாளர்களையும் கால்நடை உற்பத்தியாளர்களையும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றிணைத்தல் வேண்டும். ஆனால் மக்களின் பங்குபற்றுதல் இல்லாத கூட்டுறவு அமைப்புக்களினால் எந்த வித நன்மையும் இல்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

[இ-5]

## நாளை

சித்திரை - 24
வியாழக்கிழமை
திதி: ஏகாதசி
நண்பகல் 12.42 வரை.
நட்சத்திரம்:உத்தரம்
முன்னிரவு: 11. 09 வரை.
ஏகாதசி விரதம்
அக்கினி நாள் ஆரம்பம்
சுபநேரம்: 7.25 –8.55
ராகுகாலம்: 1.25 - 2.55
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## திருக்குறள் விழா

நெல்லியடி, மே 6

மூதறிஞர் க. சி. கு. நூற்பதிப்புக் கழகத்தின் திருக்குறள் விழா அண்மையில் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

கரவெட்டிக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இவ் விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதனினால் ''திருக்குறளில் அறநெறிகள்'' என்ற தலைப்பில் ஆய்வுரையும் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்வும், அதனையடுத்து, பரிசளிப்பும் இடம்பெற்றன.(இ–109)

## காயம்

நெல்லியடி, மே 6

துறைமுக தொழிலாளி ஒருவர் கடமை நேரத்தில் இழுவைப் படகிலிருந்து தவறி கடலுக்குள் வீழ்ந்து காயமடைந்தார்.

பருத்தித்துறை இறங்குதுறையில் பணியில் ஈடுபட்டு வந்த கரவெட்டி மேற்கைச் சேர்ந்த தங்கராசா ஸ்ரீமதன் (வயது 22) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

(இ–109)

## உதயவாக்கு

மாமனிதன் யாரெனில், தவிர்க்க முடியாததை துணிச்சலுடன் ஏற்றுக் கொள்வதோடு அதை விருப்பத்துடன் பொறுத்துக் கொள்பவனே ஆவான்.

-நீட்சே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

**சாவகச்சேரி, சங்கத்தானை**

# அருள்மிகு இத்தியடி வீரகத்தி விநாயகர்

# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ்

வெகுதானிய, சித்திரை, 23 ஆம் நாள்- **06-05-1998**

## நல்லை ஆதீனமுதல்வர் அருளாசி

சிவநேயச் செல்வர்களே!

சாவகச்சேரி இத்தியடி என்னும் பதியில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் வீரகத்தி விநாயகப் பெருமானுக்குச் சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்டவிழா நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். தன்னைவணங்காது திரிபுரங்களை எரிப்பதற்கு புறப்பட்ட சிவபெருமானுடைய தேரினுடைய அச்சாணியை உடைத்த விநாயகப் பெருமானுக்கு சித்திரத்தேர் அமைத்து விநாயகப் பெருமானை அதில் எழுந்தருளச் செய்து அருள்காட்சியைக் காணும் நிலை அனைவருக்கும் விநாயகரின் இறையருளைதரக்கூடியது. ஆணவமலத்தை நீக்கி ஞான ஒளியை ஏற்படுத்தும் நிலையை அடியார்கள் ஆகிய நாங்கள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இத்தேரை உருவாக்கிய சிற்பக்கலைஞர்களுக்கும், அடியார்களுக்கும் ஆலய அறங்காவலர் சபையினருக்கும்இறை அருள்கிடைத்து இவ்வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகிறேன்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
குருமஹா சந்நிதானம்
நல்லை ஆதீனம்.

## சிற்பாசாரியார் நன்றியுரை

எல்லாம் வல்ல இத்தியடி விநாயகப்பெருமானுக்குப் புதிய சித்திரத் தேர் அமைத்து இன்று வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.


எமது பாரம்பரிய கலைப் படைப்புக்களை வெளிப்படுத்துவதில் ஆலயங்கள் பெரும் பங்கை வகிக்கின்றன. மக்களின் தெய்வீகத் தன்மை, நுண்கலை அறிவு இவைகளை வெளிப்படுத்தும் ஆகம விதிமுறைப்படி தேர்கள் அமைக்கப்படுகின்றன.

இலங்கையிலே முதன்முறையாக கேசரம் அறுகோணம் போன்ற சித்திரத் தேர்களை அமைத்து தனக்கென இடம்பிடித்த எனது குருவாகிய அமரர் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விநாயகப்பெருமானின் கிருபையால் தென்மராட்சியில் முதன்முறையாக விநாயகப் பெருமானுக்கே உரிய கேசர வடிவில்முகவத்திரங்கள் மீட்கப்பட்ட தேராக இது அமைந்துள்ளமை சிறப்பாகும். இக் கலைப்படைப்பை ஊக்குவித்த திருப்பணிச்சபையினர், நிர்வாகசபையினர், இந்த ஊர் மக்கள், எமது சக கலைஞர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

சி. கலாமோகன்.

மட்டுவில்



## தேவஸ்தானக் குரு ஆசியுரை

வேதசிரஸ் என்றும், பிரணவம் என்றும் சுத்தமாயை என்றும் பல்வேறு வேதங்களாலும், தேவர்களாலும் புகழ்ந்து போற்றப்படுா விநாயகரே முதன்மையானவராக விளங்குகிறார்.

சைவமும், தமிழும் தழைத்து ஓங்கும் விஸ்வப் பிரம்ம மக்கள் நிறைந்து வாழும் இத்தியடி கிராமத்தில் விநாயகப் பெருமானுக்கு மிகவும் அழகும் சிற்பமும் நிறைந்த இரதம் சிற்பக்கலைஞன் கலாமோகன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டு வீதி வலம் வருகிறது.

இந் நன்னாளில் சர்வாபீஷ்டவரதராகிய வீரகத்தி விநாயகப் பெருமான் திருவருள் உலகில் துன்பம் நீங்கி இன்பம் பெருகி எம் மக்கள் அல்லலகன்று நல்லன பெற்று இன்பமாய் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப்பெருமானுடைய உபயபாதக் கமலங்களை வாழ்த்தி வந்தித்து வாழ்த்துகிறேன்.

சிவாச்சாரிய குருமணி
சிவப்பிரம்மஸ்ரீ
இ. பரமேஸ்வரக்குருக்கள்

மட்டுவில்,
சந்திரபுரம்.

## கேசரவடிவில் அமைந்த புதிய அழகிய சித்திரத்தேர்

இசைவளம், இறைவளம், கலைவளம் கனிவளம் எல்லாம் பூத்துக் குலுங்குகின்ற புண்ணியபதியாம் சாவகச்சேரி சங்கத்தானையில் கோயில் கொண்டு அருள்பாலித்து வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈந்தளிக்கும் விநாயகப் பெருமானுக்கு புதிதாக கேசரவடிவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய அழகிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் இன்று 06-05-1998 புதன் கிழமை பூரநட்சத்திரமும் தசமி திதியும் அமிர்த யோகமும் கூடிய சுபவேளையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களும் மனிதனின் அறிவை மழுங்கச் செய்கின்றன. புலன் ஐந்தின் வழி அறிவை மயங்க வைக்கின்றன. இந்த மயக்கத்தின் நின்றும் விடுபட, மாயை நம்மை விட்டகல, அறிவு தெளிவாக இருக்க வேண்டும். இறை நினைவாக இறைவனால் நாம் ஆட்கொள்ளப்பட ஓம் என்ற ஒலியின் வடிவமான ஓங்காரத்தின் சொரூபியான பிள்ளையார் எம்மைக் காக்கும் கடவுளாக நிற்கின்றார்.

எமது வினைகள் நல்வினைகளாக, எமது செயல்கள் நற்செயல்களாக, எமது நினைவுகள் நல்ல நினைவுகளாக விளங்க அவனே அருகில் இருந்து அருந்துணை புரிகிறார். ஆகவே நாம் எம்பெருமானுக்கு ஓர் அழகிய சித்திரத் தேரினை; இத்தியடி வாழ் மக்கள் இளம் கலைஞன் கி. கலாமோகனின் படைப்பில் உருவாக்கியமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

அந்தத் தேர் இன்று வெள்ளோட்ட நிகழ்வாக அமைவது எம்மை ஆனந்தசாகரத்தில் அமிழ்த்திவிட்டதில் வியப்பில்லை; கலைஞனின் கருணை உள்ளம், அவரின் கலைத்திறன் மேலோங்கி நிற்பதை அவரின் அடக்கம், பணிவு, தெய்வ நம்பிக்கை, தன்னம்பிக்கை என்பன எமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டுகின்றன. அத்தகைய குணங்கள் குன்றின் மேல் விளக்காக அணையாத் தீபமாக தீர்க்காயுசுடன் வாழ்ந்து கலைப்பணிகள் மேன்மேலும் வளர எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை இறைஞ்சி நிற்கின்றேன்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
அரன் நாமமே எங்கும் முழங்குக''

இ. இ. வேலாயுதபிள்ளை
பதில் கிராம உத்தியோகத்தர்
சங்கத்தானை.

தேர் வெள்ளோட்டம் சிறப்புற பிரார்த்திப்போர்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

**சாரங்கா நகை மாடம்**

தங்க வைர நகை வியாபாரம்
177/4, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:
**அருள்முருகன் நகையகம்**
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:
**சிவா நகைமாடம்**
யாழ். வீதி,
சாவகச்சேரி.

# உயர்தர பரீட்சை விண்ணப்பங்கள் பெருமளவில் வந்து சேரவில்லை

## மாற்று நடவடிக்கை குறித்து ஆராய்வு

கொழும்பு, மே 6

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களில் பெருந் தொகையானவை இன்னும் பரீட்சைத் திணைக்களத்துக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாள்களாக சொற்ப தொகையான விண்ணப்பங்களே கிடைத்துள்ளன எனவும்— எதிர்பார்க்கப்பட்ட விண்ணப்பங்களின் தொகையுடன் ஒப்பிடும் போது இது திருப்திகரமாக இல்லைஎனவும்— பரீட்சைத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் எதிர்வரும் வாரத்தில் போதுமான அளவு விண்ணப்பங்கள் கிடைக்காவிடில் மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. எச்.ஆர்.பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ள போதிலும் பரீட்சை பிற்போடப்பட மாட்டாது எனவும்—

குறித்த திகதியில் பரீட்சையை நடத்துவதற்கு அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும்— ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்,

(இ-10)

## மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 6

மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்து கையிருப்பு முடிவடைந்துள்ளது.

இம்மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதற்கு நாளாந்தம் வரும் 500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் மருந்தின்றித்திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கான மருந்தை வெளியிடங்களில் வாங்குமாறு கூறி மருந்துச் சிட்டை கொடுக்கும் நிலைமையே காணப்படுவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(இ-109-6)

## மத்திய கல்லூரியில் விரிவுரை

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மத்தியகல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விரிவுரைத் தொடரில் இன்று காலை 9 மணிக்கு நிகழ்தகவு என்ற தலைப்பில் முகாமைத்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்வி தி. சண்முகம் விரிவுரை நிகழ்த்துவார்.

(இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோயிலின் வருடாந்த உற்சவம் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும்.

தேர்த் திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதியும், மறுநாள் சித்திராபூரணை நன்னாளில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

அரியாலை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின வருடாந்த அலங்கார உற்சவ முடிவுநாளான இன்று புதன்கிழமை முற்பகல்10.30 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், பூசை, ஆராதனைகளும், பிற்பகல் 3.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து பெருமான் தெரு வீதிஉலாவும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 6

சங்கத்தனை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத் தேர்த்திருவிழா 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

தென்மராட்சியில் முதன் முதலாக கேசர வடிவில் அமைக்கப்பட்ட சித்திரத் தேரிலேயே சுவாமி இவ்வருடம் பவனி வருவார்.

புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம், 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். (இ-6)

★ ★ ★

ஊர்காவற்றுறை தம்பாட்டி நுணிபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய சித்திராப் பௌர்ணமித் தீர்த்த உற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதியும், மண்டலாபிஷேகப் பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் சங்காபிஷேகம் அடுத்த நாள் 12 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (இ-7)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகுஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலய சித்திரை மாதப் பூர்த்திவிழா இன்று புதன்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளது.

விசேஷ அபிடேக ஆராதனையும், அம்பிகை வீதியுலாவருதலும் விசேட நிகழ்வாக இடம்பெறும்.

இதேவேளை இன்றுகாலை 7 மணிக்கு வெகுதானிய வருட அலங்கார உற்சவத்துக்கான கன்னிக்கால் நடும் வைபவமும் இடம்பெறும். (இ-7)

★ ★ ★

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஏகாதசி விரதம் விசேட அபிஷேகம் பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

பின்பு சுவாமி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (இ-30)

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதியும், மறுநாள் சித்திராப்பூரணைதினம்தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை கிழக்கு அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவ முடிவு நாளை வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 108 கலசசங்காபிஷேகம், பூசை ஆராதனையுடன் நடைபெறும்.

ஆலயப்பிரதமகுரு பிரம்மசிவஸ்ரீ தி.சங்கராஜக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

பிற்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வரபூசை இடம்பெறும். (இ-30)

## சொற்பொழிவு

தர்மவாரத்தை முன்னிட்டு யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் இன்று புதன் கிழமை காலை 10. 30 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமசுவாமி சித்ரூபானந்தா ''சுவாமி விவேகானந்தரும் சிறுவர்களும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-135)

## சாரணிய பயிற்சி

வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் சாரணிய பயிற்சி நடத்தப்படும்.

கொழும்பு தலைமை அலுவலகத்தில் இருந்து வருகை தரும் சாரணிய ஆணையாளர்களினால் இந்தப் பயிற்சி நடத்தப்பட உள்ளது. (இ)

# பிரதேச சபையின் முதல் கூட்டம்
# கோரம் இல்லாமல் ஒத்திவைப்பு

வடமராட்சி, மே 6

வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் முதலாவது கூட்டம் கோரமின்மையால் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் செ. சுந்தரமூர்த்தி தலைமையில் இக்கூட்டம் நேற்று முற்பகல் ஆரம்பமானபோது மொத்த உறுப்பினர்கள் 18 பேரில் தலைவர் உட்பட 5 உறுப்பினர்களே கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஈ.பி.டி.பி. சார்பில் தெரிவான 9 உறுப்பினர்களில் தலைவர் சுந்தரமூர்த்தி தவிர ஏனையோரும் ரெலோ சார்பில் தெரிவான இரு உறுப்பினர்களும் இன்னமும் பதவி ஏற்கவில்லை.

ஈ. பி.ஆர்.எல்.எவ். சார்பில் தெரிவான ஒரேயொரு உறுப்பினரான செல்வராசா மதிவதனன் —

புளொட் சார்பில் தெரிவான 6 உறுப்பினர்களில் மூவரான கந்தப்பு ஜெயராஜா, தம்பிராசா குணராசா, மயில்வாகனம் ஜெயக்குமார் —

சபையின் தலைவரான சுந்தரமூர்த்தி ஆகியோரே நேற்றைய கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.

புளொட் சார்பில் தெரிவான 6 உறுப்பினர்களில் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட மூன்று உறுப்பினர்களுடன் மற்றொரு உறுப்பினரும் ஏற்கனவே பதவி ஏற்றிருந்தார் சுகவீனம் காரணமாக இவர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. ஏனைய இரு உறுப்பினர்கள் இன்னமும் பதவி ஏற்கவில்லை. (இ-173)

## விவசாய பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 6

திருநெல்வேலியிலுள்ள யாழ் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் குறுகிய கால விவசாயப் பயிற்சிநெறிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விவசாயப் பயிற்சி நெறியைத் தொடர்ந்து பின்பற்றுவதில் ஆர்வமுடைய ஆண், பெண் இருபாலாரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கணிப்பில் எடுக்கப்படமாட்டாது.

பயிற்சிநெறி வாரத்தில் ஒருநாள் இடம்பெறும் எனவும் பங்கு பற்றுபவர்களுக்கு நாளொன்றுக்கு ஊக்குவிப்புப்பணமாக 30 ரூபா வழங்கப்படுமெனவும். விண்ணப்பதாரிகள் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் விவசாயப்பயிற்சிப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## ஆண்டுவிழாக்காணும் யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 175 ஆம் ஆண்டு விழாவையொட்டி பாடசாலை மாணவ மாணவியர்களுக்கு கல்லூரி இலட்சனை பொறிக்கப்பட்ட பட்ஜும், திருக்குறளும் வழங்கப்படவுள்ளதாகக் கல்லூரி அதிபர் திரு. ஜி.இராஜநாயகம் தெரிவித்தார்.

இதேவேளை ஆண்டு விழவை முன்னிட்டு ஜூன் 22 ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் கண்காட்சியும், விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மேலும் கல்லூரியின் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-185)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை

### யாழ். கிளை மன்ற ஆண்டுப் பொதுக் கூட்டம் 1998

மேற்படி பொதுக் கூட்டம் 31-05-98 முற்பகல் 10-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 30பிரதிநிதிகள் இதற்குத் தவறாது வருகை தருதல்மிக முக்கியமென்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

கௌரவ செயலாளர்,
இ. செ. சங்கம்,
யாழ். கிளைத் தலைமையகம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3662)



உ
சிவமயம்

## மோட்ச தீபம் 06-05-98

அமரர்

### ஐயம்பிள்ளை நல்லையா

[ இணுவில் ]

எமது கல்லூரி ஆசிரியர்

**திரு. ந. சிதம்பரேஸ்வரன்**

அவர்களின் தந்தையாரின் ஆன்மா இந்நன்னாளிலே பரம்பொருளுடன் இரண்டறக் கலக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள்.

இணுவில் இந்துக் கல்லூரி,
இணுவில்.

(55404)


# திட்டமிடப்படாத விவசாயத்தால் போதிய பலனை அடைய முடியாது

## விவசாய சம்மேளன கூட்டத்தில் உரை

வலி. தென்மேற்கு, மே 6

''அனேகமான விவசாயிகள் திட்டமிடாமல் தொழில் நுட்ப ரீதியான அறிவைப் பெற்றுக் கொள்ளாது விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலைமை முற்றாக மாறவேண்டும். அப்போதுதான் விவசாய வளர்ச்சி அடைய முடியும்''

இவ்வாறு உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி. அம்பிகைபாலன் தலைமையில் நவாலி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பெரும்பாக உத்தியோகத்தர் மேலும் பேசியதாவது:-

கடந்த வருடம் விவசாயிகளின் நன்மை கருதி நாம் கொழும்பில் இருந்து விதை நெல் தருவித்திருந்தோம். இதனால் எமக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது.

இவ்வருடம் விவசாயிகளிடம் போதியளவு விதை நெல் இருப்பதால் விதை நெல் பெற்றுத் தரும் அவசியம் ஏற்படாது.

கடந்த வருடம் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட நெல் ஒரு சில விவசாயிகளுக்கு முற்றாக விளையாது போய்விட்டதையும் நாம அறிவோம்.

நவாலி விவசாய சம்மேளனம் குறுகிய காலத்தில் படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இப்படி அவர் கூறினார்.

சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட கிராம அலுவலர் அ. தனபாலரத்தினம் பேசுகையில் நவாலி விவசாய சம்மேளன விவசாய நிலப்பரப்பு மிகவும் பரந்து பட்டது. இங்கு இன்று நேற்று அல்ல கடந்த காலங்களில் இருந்தே கட்டாக் காலிகளின் தொல்லையிருந்துவருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த விவசாய சம்மேளன நிர்வாகிகளால் மட்டும் முடியாது. கால்நடைகளை வைத்திருப்போரும் இணைந்தே இதனைக் கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என்றார்.

கிராம அலுவலர் இ.இராஜயோகன் பேசுகையில் விவசாய சம்மேளனத்தை ஆரம்பித்து ஒரு வருட காலத்தில் நவாலிவிவசாயம் சம்மேளனம் விவசாயிகளின் விதை நெல், உரம் போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்தது மட்டுமல்ல பல விவசாயிகளை ஓய்வூதியத் திட்டத்திலும் சேர்த்துள்ளது. விவசாயிகளின் காணித் தகராறுகளை இச் சம்மேளனம் தீர்த்து வைத்துள்ளது என்றார்.

விவசாயிகள் தரப்பில் அ. சதாசிவம், மா. செல்வராசா, சு. மோகனமுரளி ஆகியோர் உரையாற்றினர்.

1998 ஆம் ஆண்டுக்கான புதியநிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. தொடர்ந்து நவாலி விவசாய சம்மேளன செயலாளர் எஸ். ரமேஷின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது. (இ-185)


# OBITUARY NOTICE

## Miss Daisy Amirtharatnam Vallipuram

Foremerly of Vembadi Girls High School, Jaffna. beloved sister of late Florence Kandasamy and late Selvam Samuel, sister in law of late S.T. Samuel, beloved aunt of Dr. J.C.P. Samuel (U.S.A) passed away on 4th May 1998.

Cortege leaves "Bethel", Viyaparimoolai, Pt, pedro on Wednesday 6th May at 4-00 p.m. for Internment at Methodist Buriyal Grounds, Pt. pedro.

Informant:
Dr. K. Arulampalam

(55771)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபர்

திரு. வ. கந்தசாமி

அவர்களின் அன்புத் துணைவி

திருமதி

### விஜயராணி கந்தசாமி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்

(55403)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸ் காவல் நிலையம் புலிகளால் தாக்கப்பட்டது

## ஊர்காவலர் ஒருவர் பலி!

பொலன்னறுவை மாவட்டம், மெதிரி கிரியாவிலுள்ள பொலீஸ் காவல் நிலைம் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஓர் ஊர்காவல் படை வீரர் கொல்லப்பட்டார். 2 பொலீஸார் காயமடைந்தனர்.

அன்றையதினம் அம்பாறை மாவட்டம் தம்பிட்டியவில் ஊர்காவல் வீரர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

### 2 ஊர்காவலர்...

(முதலாம் பக்கத் தொடர்)

லரண் மீதும் நேற்று அதிகாலை புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் தமது தரப்பில் ஒருவர் களப்பலியானதாகப் புலிகள் தெரிவித்தனர். (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் கதிரவேற்பிள்ளை

முன்னாள் கம்பளை வர்த்தகரும், 12A, கந்தபுராண வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது 4A அரச தொடர்மாடி பம்பலப்பிட்டி கொழும்பு 4 இல் வசிப்பவருமாகிய சுப்பிரமணியம் கதிரவேற்பிள்ளை 05-05-98 அன்று மாலை 7.30 மணி அளவில் தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா, ராசையா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தருமராஜா மற்றும் குகேஸ்வரராஜா (ஆசிரியர், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி), பாலேந்திரராஜா, சௌந்தரராஜா, கோணேஸ்வரராஜா, ரவீந்திரராஜா, புஷ்பமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜசேகரன், ஜெயராணி, சரோஜினி தேவி, மலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க ரவீந்திரராஜா
(மகன்)

4A, அரச தொடர் மாடி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 4.

(சி/3663)

## திருமதி சவுந்தரம் தம்பிப்பிள்ளை

காரைநகர், களபூமியை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சின்னாலடியில் வசித்தவருமான திருமதி சவுந்தரம் தம்பிப்பிள்ளை நேற்று 5-5-98 இல் காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பரராசசிங்கத்தின் (முகாமையாளர், S. K. M. தொலைத் தொடர்பகம், யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும், பராசக்தியின் (யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) அன்பு மாமியாரும், நந்தகுமார், சுகந்தினி, சந்திரகுமார், இந்திரகுமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாம்பலோடை மயானத்தில் இன்று புதன்கிழமை (6 - 5 - 98) முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. தம்பிப்பிள்ளை
(கணவர்)

(55781)

## திருமதி ஆச்சிமுத்து அருணாசலம்

மயிலிட்டி தெற்கு, கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிமுத்து அருணாசலம் அவர்கள் 02-05-98 (சனிக்கிழமை) அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் திரு. சின்னத்தம்பி அருணாசலம் (இளைப்பாறிய உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முருகேசு - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், வசந்தகோகிலம்- நாகேந்திரன் (கொழும்பு), வசந்தாதேவி - தர்மசீலன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயரும், கனடாவில் வசிப்பவர்களாகிய வடிவேலு நாகேந்திரன், சின்னத்துரை தர்மசீலன் ஆகியோரின் அருமை மாமியாரும், செல்வியர் நர்மதா (கனடா), பவித்ரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற செல்லத்துரை, திருமதி மாணிக்கம், தம்பிராசா, காலஞ்சென்ற சின்னையா ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-05-98) புதன்கிழமை காலை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி வசந்தா நாகேந்திரன்
(மகள்)

26 A, விவேகானந்த மேடு,
(மோடிஹேறால்)
கொழும்பு - 13.

(55783)

### வன்னியில்..

(முதலாம் பக்கத்தொடர்)

தெரிவித்தன.

சேத விவரங்கள் தெரியவரவில்லை.

அதே நேரம் — கடந்த இரு தினங்களாக பஸ்கள், டிரக்குகள் மூலம் படையினர் வவுனியா ஊடாக போர் முனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வண்ணம் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

### புலிகளைச்...

(முதலாம் பக்கத் தொடர்)

அங்கு தங்கும் அவர் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதுடன், அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்வார்.

நாளை பிற்பகல் 4மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு வவுனியா வந்து சேரும் அவர் வேப்பங்குளம், பூந்தோட்டம் அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்வார்.

மறுநாள் நண்பகல் அவர் கொழும்பு திரும்புவார்.

### விமானப்படை..

(முதலாம் பக்கத் தொடர்)

டொன்பிரதீப் கன்னங்கரா ஆகியோரே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அங்கு நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்களை இக்பால் அத்தாஸ், அவரது மனைவி அனோமா ஆகியோர் அடையாளம் காட்டினர்.

சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை வியக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்களில் ஹேரத் என்பவர் விமானப்படையின் முன்னாள் தளபதி ஒலிவர் ரணசிங்கவின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலராகப் பணிபுரிந்தார் என்றும்—

இது தொடர்பாக மேலும் 10 பேர் விரைவில் கைது செய்யப்படுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்—இக்பால்அத்தாஸின் வீட்டுக்கு அருகில் நடமாடும் பொலீஸ் சேவையை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மேற்கொள்ளுமாறு பொலீஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (இ-10-3)

### படைக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்)

மீண்டும் திரும்பி வந்து படையில் சேர்ந்துகொள்ள இன்று முதல் 5 நாள்களுக்கு பொது மன்னிப்பு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் படைகளுக்கு ஆள்களைச் சேர்க்க நேர்முகப் பரீட்சை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இவ்விரு நடவடிக்கைகளுக்கும் பயன் கிடைக்காது போனால் கட்டாய இராணுவ சேவையை அமுல் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கொழும்பு செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கும் இக்கட்டாய இராணுவ சேவை எப்போது நடைமுறைக்கு வரும் என்பது குறித்து அறிவிக்கப் படவில்லை. (இ-3)

# குடாநாட்டைச் சேர்ந்த 12பேர் விடுதலையாகினர்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 பேர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் நீதிமன்றத்தில் இவர்களுக்காக வாதாடி இவர்களை விடுவித்து ஈ. பி. டி. பி. அமைப்பின் திருகோணமலை அலுவலகப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தார்.

அடுத்து வரும் கப்பலில் இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

விடுதலையானோர் விவரம் வருமாறு:

ஜே. முகுந்தன் (நெல்லியடி), த. மகேஸ்வரன் (சுதுமலை தெற்கு), அ. அனிரோக்கிறஸ் (நல்லூர்), சு. ஜெயசுதாஸ் (கொடிகாமம்), கி. ரகுராதா (ஊரணி), சு. வரதராசா (மூளாய்தெற்கு), மா. கணேசலிங்கம் (மானிப்பாய்), இ. செல்வகுமார் (அளவெட்டி மேற்கு), த. பாலபரமேஸ்வரி, த. தீபா, செ. தவராணி (நாவற்குழி), ஆ. சிவலிங்கம் (அச்சுவேலி) (இ-3)

# மண்வெட்டி விநியோகம்

யாழ்ப்பாணம், மே 6

உலக உண்வு விவசாய நிறுவனம் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கவென ஒரு தொகுதி மண்வெட்டிகளை இலவசமாக வழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலகம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் மண்வெட்டிகளை விநியோகிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது. (இ-7)

# வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள்

யாழ்ப்பாணம், மே 6

வடக்கு — கிழக்கு மாகாணப் போட்டிக்கு அணிகளை தெரிவு செய்வதற்காக வலயம் 1, வலயம் 2 அணிகளுக்கிடையில் நடைபெறும் போட்டிகளில் இன்று யாழ். இந்து மகளிர் மைதனத்தில் நடைபெறும் வலைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணி விவரம் வருமாறு:

★ 15 வயதுப் பிரிவு —சண்டிலிப்பாய் இந்து எதிர் யூனியன் கல்லூரி, வேம்படி மகளிர் எதிர் திருக்குடும்ப கன்னியர் மடம்.

★ 17 வயது பிரிவு — சுண்டுக்குளி மகளிர் எதிர் கனகரத்தினம் ம. வி., வட-இந்து எதிர் சண்டிலிப்பாய் இந்து.

★ 19 வயதுப் பிரிவு — வட - இந்து எதிர் இராமநாதன் மகளிர், கனகரத்தினம் எதிர் வேம்படி.

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

யுத்தத்தினால் மக்கள் இடம்பெயர்வுகள், போசாக்கின்மை, வறுமை, கலாசார சீரவுகள் போன்றவற்றைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நோயுள்ள, போசாக்கற்ற சிறுவர் சமுதாயம் ஒன்றையும் நாம் வளர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

மேற்கு நாடுகளில் ஐ. நா. தலையிட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண்பது போல இலங்கை விடயத்தில் ஏன் னது பங்களிப்பை வழங்கக் கூடாது.

இன்று அவசரமானதேவையான யுத்தத்தை நிறுத்த — ஐ. நா. சபை தனது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் — என்று கோரினர்.

நேற்று குருநகர் இறங்குதுறை, நலன்புரி நிலையம் ஆகியவற்றுக்கும் சென்ற ஐ. நா. பிரதிநிதி நேற்றுமாலை கொழும்பு திரும்பினார். (இ-3-6-21)

# ஈ. பி. டி. பி, தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் வந்துள்ள மாத்தறை நில்மினி விளையாட்டுக்கழக வீரர்களுக்கு ஈ. பி. டி. பியினர் நேற்றுத் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தனர்.

யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வி. கே. ஜெகன் இவர்களை வரவேற்று அங்கு உரையாற்றினார். (இ-3)

# திருத்தம்

6 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள லியோ கழகத்தின் கட்டுரைப் போட்டி தொடர்பான விளம்பரத்தில் கட்டுரைப் போட்டி விதிகள் என்ற தலைப்பின் கீழ் உள்ள 2 ஆம் பந்தியை "தாளின் ஒரு பக்கத்தில் ஆயிரம்சொற்களுக்கு மேற்படாது எழுதப் படவேண்டும்" என்று வாசிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

— லியோ தலைவர்

### ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

கூட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடாகியிருந்தது.

இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வர கடந்த 27 ஆம் திகதி ஸ்ரீ காந்தா பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்ததாகவும் —

நேற்று வரை அவருக்கு அனுமதி வழ்ங்கப்படவில்லை என்றும் — ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரின் வருகைக்காக இன்று நடைபெற விருந்த கூட்டம் நாளை மறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ரெலோ வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (இ-3)


TELE GLOBE COMMUNICATION
ரெலி குளோப் தொலைத்தொடர்பு சேவை

வெளியூர், உள்ளூர்த் தொலைபேசித் தொடர்புகளை
உடனடியாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

கரவெட்டி தபாற்கந்தோருக்கு முன்பாகவுள்ள
ரெலி குளோப் தொலைத்தொடர்பு சேவை

வெளிநாட்டில் இருந்து எடுப்பதற்கு:- 0094 - 70212237
உள்ளூர்:- 070 - 212237

(சி/3657)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சுமனையில், 6-5-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org